1995 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு.பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி மாவட்டம், ஓசூர் பகுதியில் ஊதுபத்தி அலகு நிறுவிடும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

திரு.கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலே மலர்கள் அதிகமாக பயிரிடப்படுகின்ற காரணத்தினாலே அதிலேயிருந்து வாசனைத் திரவியங்களை எடுப்பதற்கான ஆலைகளை அங்கே அமைக்கலாம். கதர் வாரியத்தின் மூலமாக கடன் கொடுத்து அந்தமாதிரியான தொழிற்சாலைகளை அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை என்ற இடத்தில் ஏற்கெனவே வாரியத்தின் மூலம் நேரடியாக நடத்தப்படக்கூடிய அலகு ஒன்று செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அதேமாவட்டத்தில் அஞ்சப்பட்டி பிர்க்கா என்ற இடத்தில் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, மேலும் வாரியத்தின் மூலம் நேரடியாக அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று தனி நபர்கள் முன் வந்தால் அவர்களுக்கு வாரியத்தின் மூலம் கடனுதவி கொடுப்பதற்கு தகுதியின் அடிப்படையிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 301 திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு நிதியமைச்சர்.

301—

அம்மாபேட்டையில் கிளைக் கருவூலம் அமைத்தல்

***38773—திரு. வே. பெரியசாமி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, அம்மாபேட்டையில் ஒரு கிளைக் கருவூலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கிளைக் கருவூலம் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ): அந்தியூர் தொகுதியில், அம்மாபேட்டைக்கென்று கிளைக் கருவூலம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை பகுதியில் ஒரு சார்பு கருவூலத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மூலமாகக் கேட்டு இருந்தேன். இந்தப் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. இங்கே உயர்நிலைப் பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. உதவிக் கல்வி அலுவலகம் இருக்கிறது. தொடக்கப் பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன. ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. சார்புப் பதிவாளர் அலுவலகம் இருக்கிறது. இங்கே இருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலேயுள்ள பவானி, அந்தியூர் போன்ற பகுதியிலுள்ள கஜானாவுக்குப் போய்தான் காசோலையை மாற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்தப் புனிதமான ஆட்சியில் ஏழையெளிய மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அரசு ஊழியர்களுக்காக ஏராளமான சலுகைகளை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த நிதிநிலை நேரத்தில் அருள்கூர்ந்து அங்கே ஒரு கருவூலத்தை ஆரம்பிக்க மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் பவானியில் இயங்கி வந்த சார்நிலைக் கருவூலம் 25-8-1986-லேதான் . . . பிரிக்கப்பட்டு அந்தியூர் பகுதியில் ஒரு சார்நிலைக் கருவூலமும், பவானியில் ஒரு சார்நிலைக் கருவூலமும் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அந்தியூர் சார்நிலைக் கருவூலத்திலிருந்து பட்டிகள் மூலம் பணம் பெறும் அதிகாரம் உள்ள 37 துறைகளும், பவானி சார்நிலைக் கருவூலத்திலிருந்து பட்டிகள் மூலம் பணம் பெறும் அதிகாரம் உள்ள 44 துறைகளும் இயங்கி பயன் பெற்று வருகின்றன. ஆகவே, ஒரு கூடுதல் கருவூலம் ஆரம்பிக்க

1995 ஏப்ரல் 17]

வேண்டுமென்றால் வேலைப்பளு இருக்க வேண்டும்; அதற்கான தேவை இருக்க வேண்டும். இவற்றிலே எந்தவொரு கருவூலத்திலேயும் வேலைப் பளு அதிகம் என்று, இருக்கின்ற நியதிப்படி கிடையாது. ஆகவே, அதிலிருந்து பிரித்து தனியொரு கருவூலம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. நிதி நெருக்கடியான நேரத்தில், திட்டமில்லா இனங்களில் செலவைக் குறைக்க வேண்டிய தன்மைகளை இந்த அவையும் உணர்ந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரும் உணர்ந்திருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு அள்ளிக் கொடுக்கிறது என்றாலும், அதிலே அளவோடுதான் அள்ளிக் கொடுக்க வேண்டுமே தவிர அளவுக்கு மீறி அள்ளித்தர இயலாது. ஆகவே, இங்கே ஒரு துணைக் கருவூலம் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்; தெரிந்து கொள்ளவும் வேண்டும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களினுடைய ஒரே இரட்சகர் எங்களுடைய கடவுள் புனித அன்னை டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் ஏராளமான புதிய புதிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்ற நேரத்தில், பணத்தைப் பற்றியும், தமிழகத்தினுடைய நிதிநிலையைப் பற்றியும் நான் நன்றாக-நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் தெளிவாக, திட்பமாக, நுட்பமாகச் சொல்லியுள்ளார்கள்-அறிகிறேன். இருந்தாலும் அந்தப் பகுதியினுடைய அரசு அதிகாரிகள் பளுவினைக் குறைப்பதற்காக மூன்று நாட்களுக்கு ஒரு முறையாவது அங்கே ஒரு கஜானாவை ஏற்பாடு செய்து (குறுக்கீடு) பார்ட் டைம் மாதிரி செய்து ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னேன். அந்தத் தொகுதியிலே இரண்டு கருவூலங்கள் இருக்கின்றன. அவற்றிலே போதுமான அளவிற்கு குறைந்த வேலைகள் இருக்கின்றன. வேலைப் பளு என்று ஏற்பட்டு ஒரு தனிக் கருவூலம் அமைப்பதற்கான அவசியம் ஏற்பட்டால்தான் அமைக்க முடியும். ஊருக்கு ஒரு கருவூலம் வேண்டுமென்பது முறையும் ஆகாது. எங்கள் ஊருக்கு ஒன்று வேண்டுமென்று கேட்பதும் சரியாக ஆகாது. ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேறு எந்தெந்த வகைகளிலே வசதி வாய்ப்புகளெல்லாம் செய்ய இயலுமோ அவற்றை இந்த அரசு முறைப்படி செய்து கொண்டிருக்கிறது. கருவூலத்திற்கு ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட, சாதாரணமானவர்கள் ஏன் போகப் போகிறார்கள்? (சிரிப்பு)

காசோலை மாற்ற வேண்டிய அவசியமோ காசுசெலுத்தவேண்டிய அவசியமோ இருக்காது. ஆகவே, அவர்களுக்கு வேறே வகையிலேதான் உதவி செய்ய வேண்டும்; இந்த வகையிலே வேண்டாம்.

315—

நன்னிலத்தில் அடுக்கு மாடிக் கடைகள் மற்றும் திரையரங்கு அமைத்தல்

***21840**—டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் நகர பஞ்சாயத்திற்குச் சொந்தமான பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள உபயோகமற்ற குளத்தில் அடுக்கு மாடிக் கடைகள் மற்றும் திரையரங்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

317—

முள்ளுக்குறிச்சியில் கூட்டுறவு வங்கி திறத்தல்

***37395**— திரு. கா. சின்னசாமி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, முள்ளுக்குறிச்சியில் மலைவாழ் மக்களுக்கென பவர்காடு கிளை மூலம் கூட்டுறவு வங்கி திறக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி, முள்ளுக்குறிச்சியில் மலைவாழ் மக்களுக்கென பவர்காடு பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் கிளை ஒன்று துவக்க சாத்தியக் கூறுகள் இல்லை.